பக்கங்கள்:-25

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 21 | புதன்கிழமை | 04.02.2026 | அதிர்வு 188

## 78ஆவது சுந்திர தினம்: தென்னிலங்கையில் இன்று கோலாகல கொண்டாட்டம்



இலங்கையின் 78ஆவது சுதந்திர தினத்தைத் தென்னி லங்கையில் இன்று கோலாகல 06



# வடக்கு - கிழக்கில் இன்று கரிநாள் போராட்டங்கள்!

## உரிமைக் குரல் எழுப்ப கிளிநொச்சியிலும் மட்டக்களப்பில் தமிழர்கள் திரள்வார்கள்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் 78ஆவது சுதந்திர தினமான இன்றைய தினத்தை தமிழர் தாயகமானவடக்கு-கிழக்கில்கரிநாளாகஅறிவித்து போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

இலங்கையின் சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரிநாள் என்ற கோஷத்தை முன்வைத்தும், எட்டு அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தியும் வடக்கு - கிழக்கில் போராட்டங்களுக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர். 06

# மின்சார வேலியில் சிக்கி 5 வயது சிறுவன் மரணம்!



## முல்லைத்தீவில் நேற்று துயரம்

(ச.தவசீலன், பா.சதீசன்)

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்கி 5 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்தார். பாட்டியுடன் புல்லு வெட்டுவதற்காகச் சென்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

முல்லைத்தீவு – புளியங்குளம் – அலகரை கிராமத்தில் நேற்று 06




எது நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ, அது நடந்து விட்டது. இவ்வளவு விரைவாக அது நடக்கும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. அவ்வளவுதான்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனை விலக்குவது பற்றிய விடயத்தைத்தான் கூறுகிறேன்.

இந்த முடிவை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வழங்கப்பட்ட கடிதங்களின் அடிப்படையில் நோக்கினால், இது பதவி விலக்கல் அல்ல. தற்காலிக இடைநிறுத்தமாகவே தோன்றுகின்றது. தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு பணிப்புரை விடுத்ததற்கு அமைய அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர் பதவியிலிருந்து சிறிதரன் விலகிக் கொண்டால், உடனடியாக அவருக்கு மீளவும் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி வழங்கப்படும் என்று திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாகத்தான் இந்தப் பொறுப்பு இப்போது 06

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் வழக்கு: மைத்திரிக்கான அழைப்பாணை இரத்து!



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்துச் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் இதனை எதிர்த்து மைத்திரிபால சிறிசேன மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று 5 நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும், புதிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டால், கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தொடர்புடைய சட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு இந்தத் தீர்ப்பு தடையாக இருக்காது என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.



## ஜனாதிபதியுடனான பேச்சையடுத்து

# பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது!

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகப் பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடன் நேற்று நடத்தப்பட்ட சுமூகமான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுமார் எட்டு நாட்களாகத் தொடர்ந்த இந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் ஜனாதிபதிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது, அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதற்காக நடத்தப்படும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பரீட்சையின் பின்னர், அடுத்த ஆறு மாத காலப்பகுதிக்குள் தகுதியுள்ள அனைவரையும் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதாக ஜனாதிபதி இதன்போது உறுதியளித்துள்ளார்.

தங்களுக்கு வழங்கப்பட்ட இந்த உறுதிமொழியை அடுத்து, உணவு தவிர்ப்புப் போராட்டத்தை உடனடியாகக் கைவிடுவதாக அகில இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த ஏழு வருடங்களாகப் பாடசாலைகளில் பணியாற்றி வரும் தங்களை, எவ்வித நிபந்தனையுமின்றி ஆசிரியர் சேவையில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையுடனேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# பாடசாலை அபிவிருத்தி அலுவலர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி நேற்றுப் பேச்சு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பிற்கு இணங்க, பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இது தொடர்பான பிரச்சினைகளுக்கு தற்போதைய அரசாங்கமோ அல்லது ஜனாதிபதியோ பொறுப்பல்ல என்ற போதிலும், ஒரு தொழில்முறை ரீதியாகத் தாம் தற்போது பல்வேறு தொழில்சார் மற்றும் சமூகப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாக சங்கப் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் குறித்த மிக நீண்ட கலந்துரையாடலில் இணைந்து கொண்ட ஜனாதிபதி, அனைத்து உத்தியோகத்தர்களினதும் தொழில்சார் கௌரவத்தையும் அந்தஸ்தையும் பாதுகாப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

பாடசாலைகளில் பணியாற்றி அனுபவம் கொண்ட பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும், எனவே ஆசிரியர் சேவை யாப்பிற்கு இணங்க, போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அவர்களுக்கு தான் அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார, ஜனாதிபதி மக்கள் தொடர்புப் பணிப்பாளர் நாயகம் தர்மசிறி கமகே மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.














# காணி விடுவிப்பு தொடர்பாக வடக்கு ஆளுநருடன் புதிய யாழ். பாதுகாப்புத் தளபதி கலந்துரையாடல்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் புதிய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கே.ரி.பி.டி.சில்வாவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாகக் கடந்த 27ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் கே.ரி.பி.டி. சில்வா, வடக்கு மாகாண ஆளுநரை நேற்று சம்பிரதாயபூர்வமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பொதுமக்களின் காணிகளை விடுவித்தல் தொடர்பாகவும், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட காணி விடுவிப்புக்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள விவசாயப் பண்ணைகளை விடுவிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் மற்றும் அதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

பாதுகாப்புத் தரப்பினரால் நிர்வகிக்கப்படும் வர்த்தக நிலையங்கள் தொடர்பாகவும் ஆளுநரால் இந்தச் சந்திப்பின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், பாதுகாப்புத் தரப்பினர் கடந்த காலங்களில் வழங்கிய ஒத்துழைப்புக்கள் குறித்தும் இதன்போது கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.







# இன்றைய கரிநாள் கவனவீர்ப்பில் தமிழர்கள் சகலரும் அணிதிரள்க!

## ரவிகரன் எம்.பி. அழைப்பு



(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 78ஆண்டுகள் ஆகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதும் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு இதுவரை சுதந்திரம்கிடைக்கவில்லையெனவன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இன்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழகமாணவர்களின் ஒழுங்குபடுத்தலில் வடக்கில் கிளிநொச்சியிலும், கிழக்கில் மட்டக்களப்பிலும் இடம்பெறவுள்ள "சிறிலங்காவின் சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரிநாள்" என்னும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ் மக்கள் அனைவரும் அணிதிரண்டு ஆதரவு நல்கவேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த "சிறிலங்காவின் சுதந்திரநாள் தமிழர்களுக்கு கரிநாள்" எனும் கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்கும். வகையில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போதுநாடாளுமன்றஉறுப்பினர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - கடந்த 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் நாளானது தமிழ் மக்களால் நேசிக்கப் படக்கூடியதாகவோ, கொண்டாடக்கூடியதாகவோ இல்லை.

தமிழர்களுக்கு விடிவு என்பது இல்லாத ஒன்றாகவே நோக்கப்படுகின்றது. ஒடுக்குமுறைகள் மிக அதிகமாகி வஞ்சிக்கப் பட்ட தமிழ் மக்களே ஏராளம்.

நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்கள்கூட முன்னைய ஆட்சியாளர்களால் வஞ்சிக்கப்பட்டார்கள்.

ஆனால் இதுவரை எமக்குத்தான் விடிவில்லாமல் அலைகின்றோம் எனத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் துன்பப்படுகின்றார்கள்.

தமிழர் தாயகப் பரப்புகளில் தொடர்ச்சியாக நிலஆக்கிரமிப்புக்கள், பௌத்த மயமாக்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்தோடு தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழர்களைச் சிறுபான்மையினராக்குவதற்காக திட்டமிட்டு பெரும்பான்மையினக் குடியேற்றங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தவிர வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இதுவரை நீதி வழங்கப் படாமை, சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் இதுவரை விடுவிக்கப் படாமை, தமிழர்கள் தமக்கான அரசியல் தீர்வாக சமஷ்டியைக் கோருகின்ற போதும் இதுவரை ஆட்சியாளர்கள் அதற்கு செவிசாய்க்காத நிலை, முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் மற்றும் நீதி இதுவரை வழங்கப்படாமை என இந்தநாட்டில்தமிழர்கள்ஆட்சியாளர்களால்தொடர்ச்சியாகப் பலவழிகளிலும் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் எவ்வாறு இலங்கையின் சுதந்திரதினத்தை கொண்டாடுவது என்ற எண்ணத்தில்தான் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள அரச அலுவலகங்களில. கூட இலங்கை சுதந்திரதினம் மனமகிழ்வோடு கொண்டாடப் படுவதில்லை. ஒரு சம்பிரதாயச் செயற்பாடாகவே சுதந்திரதினச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்டுகின்றன.

எங்களுடை இளைஞர்களே எங்களுடைய எதிர்காலம். ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 04ஆம்திகதி பல்கலைக் கழகசமூகம் "சிறிலங்காவிற்கு சுதந்திரநாள் தமிழர்களுக்கு கரிநாள்" என்று ஆட்சியாளர்களுக்குநினைவூட்டிவருகின்றனர்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இளைஞர்கள் இலங்கையின் சுதந்திர தினத்தன்று தமிழர்கள் தமது வேதனையை வெளிப்படுத்தும் "சிறிலங்காவின் சுதந்திரநாள் தமிழர்களுக்குகரிநாள்"எனும்கவனவீர்ப்புஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர். எனவே இந்தக் கவனவீர்ப்பிற்கு அணி-திரண்டு ஆதரவு நல்குமாறு அனைத்துத் தமிழ் மக்களிடமும் கேட்டுக்கொள்கி-ன்றேன் - என்றார்.

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 05, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள இலக்கம் 154 எனும் ஆதனம் எமது ஆதனப்பதிவேட்டில் ஆறுமுகம் சுப்பிரமணியம் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தினை ஆறுமுகம் சுப்பிரமணியம் செல்வரத்தினமும் பெண் சற்குணதேவியும் யாழ் நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் முகதாவில் 2007/12/30ம் திகதி 10265ம் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் செல்வரத்தினம் மகள் காவேரிக்கு தமது சீவிய உரித்துக்கு இலக்கத்தில் அமைவாக நன்கொடை வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் 2007.12.30ம் திகதி 10265ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி தனது சொந்தமும் ஆட்சியுமான ஆதனமாகும் என்ற வகையில் குறித்த உறுதி மூலம் உரிமை கோருகிறார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட 5ம் வட்டாரத்தில் வரி இல 154 இனைக் கொண்ட ஆடியபாதம் வீதி J/109, இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்த நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை பீத்தோட்டமும் மறுபிரிவுகளும் நில.பர. 3 குளி 6,3/4 லும் வீடும் கிணறும் பயிர் வகைகளும் கிழக்கே இருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் வடக்குக் காணிக்குள் நிற்கும் பலாமரம் ஒன்றும் துண்டு 1 என்றும் என்னால் சுட்டிய நிலபர.3 குளி 6, 3/4 இதன் எல்லை:

கிழக்கு: றோட்டும் சிறிவாலய அம்மன் கோவில் காணியும்.

வடக்கு: கையொடுங்கை

மேற்கு : கார்த்திகேசு பெண் அன்னப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம்

தெற்கு: சிறி சட்டநாதர் சிவன்கோவில் ஆதனம் இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை செல்வரத்தினம் மகள் காவேரி என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அ ளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்வரத்தினம் மகள் காவேரி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்காலிகமாகவே சாணக்கியனிடம் ஒப்படைக்கப்பட்டு இருப்பதாக இப்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அரசியல் குழு எதிர்பார்க்கின்றபடி சிறிதரன் அரசமைப்புக் கவுன்ஸிலில் உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வாரா? மீண்டும் நாடாளுமன்றக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்பாரா? – என்ற கேள்விகளுக்கெல்லாம் காலம்தான் பதில் கூற வேண்டும்.

ஆனால் இவ்விடயத்தை ஒட்டி சில விவகாரங்களை சுட்டிக்காட்டுவது பொருத்தமானது என்று நினைக்கிறேன்.

சிறிதரனை நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து விலக்குவது தொடர்பாக சபாநாயகருக்கு தமிழரசுக் கட்சியின் தலைவரும் செயலாளரும் ஒப்பமிட்டு அனுப்பிய கடிதம் ஜனவரி 30 ஆம் திகதி இடப்பட்டு இருந்தது.

கடந்த 24ஆம் திகதி இந்த முடிவை கட்சியின் அரசியல் குழு எடுத்திருந்த போதிலும், ஒரு வார காலம் பொறுத்து, சிறிதரனுக்கு கால அவகாசம் வழங்கி, அதன் பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மிகக் காறாராக இருந்தார் எனத் தெரிகிறது.

ஜனவரி 30 ஆம் திகதி இடப்பட்ட கடிதம் அவரது ஒப்பத்துக்காக கையளிக்கப்பட்ட போது அதில் அவர் ஒப்பமிட்ட போதிலும் பெப்ரவரி முதலாம் திகதி வரை ஒரு வார கால அவகாசத்தை வழங்கிய பின்னர் மட்டுமே இந்த கடிதத்தை உரிய இடங்களுக்கு அனுப்பலாம் என்ற நிபந்தனையுடன்தான் கடிதத்தில் ஒப்பமிட்டு செயலாளருக்கு அதை அனுப்பி வைத்தார் என அறிய வந்தது.

அவர் எதிர்பார்த்தபடி முதலாம் திகதி முடிந்த பின்னரே கடிதம் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு – சபாநாயகருக்கும் அக்கடிதத்தின் பிரதி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும் – அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றது.

அவ்வாறு கடிதம் அனுப்பப்பட்டு இருப்பது பற்றிய செய்தி சிறிதரனுக்கும் விளக்கமாக விவரமாக கடித வடிவத்தில் அனுப்பப்பட்டது என அறிய வந்தது. அந்தக் கடிதத்திலும் கட்சியின் தலைவரும் செயலாளரும் ஒப்பமிட்டிருந்தனர்.

இவ்வாறு நாடாளுமன்றக் குழுத் தலைவர் பொறுப்பிலிருந்து சிறிதரன் விலக்கப்பட்டு, அந்தப் பொறுப்பு சாணக்கியனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்ற தகவல் நேற்றுக் காலை 7 மணி அளவில் வட்ஸ் அப் குரூப் செய்தி மூலம் கட்சியின் நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் எண்மருக்கும் பொதுச் செயலாளரால் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பான அறிவுறுத்தல் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தலைவர், செயலாளர் ஆகிய இருவரினதும் ஒப்பத்துடனேயே அனுப்பப்பட்டிருக்கின்றது என்ற தகவலும் அந்த வட்ஸ் அப் செய்தியில் தெளிவுபடுத்தப்பட்டிருந்ததாக அறிய வந்தது.

அது மாத்திரமல்ல, கட்சியின் தலைவர் சிவஞானம் இப்படிக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது என்ற விடயத்தை கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் உட்பட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலருக்கும் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினார் என்றும் அறிய வருகின்றது.

அதன் பின்னர் நேற்று பகல் ஊடகங்களுக்கு பேட்டியளித்த சிறிநேசன் எம்.பி., இவ்வாறு நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து சிறிதரன் விலக்கப்பட்டிருக்கின்றார் எனச் செயலாளரும் விலக்கப்படவில்லை என தலைவரும் தெரிவிக்கிறார்கள் என்று குழப்பகரமான ஒரு கருத்தை ஊடகப் பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார். இந்தக் குழப்பம் அவருக்கு எப்படி ஏற்பட்டது, அதன் பின்புலம் யாது என்பது எனக்குப் புரியவில்லை.

தலைவரும், செயலாளரும் ஒப்பமிட்டுத்தான் சபாநாயகருக்கும் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள் என்ற விடயம் தலைவரினாலும் செயலாளரினாலும் அவருக்கு தெரிவிக்கப்பட்ட பின்னரும், இவ்வகாரத்தில் தலைவர் ஒன்று கூறுகிறார், செயலாளர் வேறு ஒன்று கூறுகிறார் என பழைய புராணத்தை அவர் ஏன் பாடினார் என்பது விளங்கவில்லை.

அடுத்த விடயம் நேற்று காலை 7 மணி அளவில்தான் இந்த செய்தி தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எல்லோருக்கும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் காலை ஒன்பது மணி அளவில் நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பியைச் சந்தித்த அரசு தரப்பில் முக்கிய அமைச்சர் ஒருவர், சிறிதரனுக்கு ஏன் இப்படி ஆயிற்று என்று சாணக்கியனை வழிமறித்து கேட்டிருக்கிறார்.

ஆக, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து சிறிதரன் விலக்கப்பட்டு இருக்கின்றார் என்ற செய்தி அவரது கட்சியின் சக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் போன்றவர்களால் கூட சரிவரை புரிந்து கொள்ளப்பட முன்னர் விவகாரம் அரசு தரப்பில் மூத்த அமைச்சர்கள் வரை தெளிவாக விளங்கிக் கொள்ளக்கூடிய நிலையை எட்டிவிட்டது.

ஆக, தமிழரசுக் கட்சியின் விடயங்களில் ஆளுதரப்பின் ஊடுருவலும் ஊடாட்டமும் அவ்வளவு தூரம் ஆழமாக ஊடறுத்து உள்ளது என்பது கவனிக்கத்தக்கதுதான்.

இனி, தமிழரசுக் கட்சிக்குள் அடுத்த கட்ட நகர்வு என்பது அதன் மத்திய குழுக் கூட்டத்தில்தான் நடைபெறும் என எதிர்பார்க்கலாம். ஆனால் அந்தக் கூட்டம் இந்த மாதத்தில் நடப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தம்முடைய சொந்தக் குடும்பப் பயணமாக இம்மாதம் நடுப்பகுதியில் இருந்து பத்து நாள்கள் மேற்குலக நாடு ஒன்றுக்கு செல்கின்றார் எனத் தெரிய வருகின்றது. அவர் நாடு திரும்பும் வரை கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடைபெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிகின்றது.

இதே சமயம் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இன்று சுதந்திர தினம் முடிந்த பின்னர், நாளை புதுடில்லி செல்கிறார் என விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

நாட்டில் மாகாண சபை தேர்தல்கள் மற்றும் மாகாண சபை முறைமைகளுக்கு எதிரான – கடுமையான – கருத்து நிலைப்பாட்டை கொண்டுள்ள ரில்வின் சில்வா தம்முடைய அந்த நிலைப்பாட்டை புதுடில்லிக்கு வலியுறுத்தி, புதுடில்லியை அந்த வழிக்கு வர பண்ணுவாரா அல்லது புதுடில்லியின் அழுத்ததிற்கு இணங்கி, மாகாண சபைத் தேர்தலை நடத்தும் இணக்கத்தை புதுடில்லிக்குத் தெரிவித்து விட்டு வருவாரா என்பதை அவரது பயணத்தின் முடிவில் அறிவதற்கு பல தரப்புகளும் காத்திருக்கின்றன. நாமும் பார்த்திருப்போம்.

## மின்சார வேலி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மோகனராசா லோபிதன் என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

சிறுவனும் அவரின் பாட்டியும் புல்லு வெட்டுவதற்காக தோட்டப் பகுதிக்கு சென்றுள்ளனர். அங்கு யானைக்கு சட்டவிரோதமாக வைக்கப்பட்ட மின்சார வேலியில் சிறுவனின் கழுத்து சிக்கியது. அப்போது, மின்சாரத்தால் தாக்குண்டு அவர் தூக்கி வீசப்பட்டார்.

அங்கு நின்றவர்கள் அவரை மீட்டு ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது வழியிலேயே சிறுவன் உயிரிழந்தார்.

சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தென்னிலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதான நிகழ்வு இன்று காலை 7.45 மணிமுதல் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது. இது தவிர, பல்வேறு பகுதிகளிலும் சுதந்திர தின சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று, நாடு முழுவதும் அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களிலும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், சுதந்திர தினத்தையொட்டி தென்னிலங்கையில் தேசிய கொடி விற்பனையும் அதிகளவில் காணப்படுகின்றது. எனினும், தமிழர் அதிகம் வாழும் பகுதிகளில் அவ்வாறான நிலைமை இல்லை.

1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து ஒல்லாந்தர், பிரித்தானியர் என்று சுமார் 450 ஆண்டுகளுக்கும் மேலாக அந்நியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இலங்கை 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சுதந்திரமடைந்தது.

## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மாணவர்களின் இந்த அழைப்புக்குத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், வடக்கு – கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம், பொது அமைப்புகள், வணிகர் சங்கங்கள், கடற்றொழிலாளர் அமைப்புகள், சமூக நிறுவனங்கள் எனப் பல அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

அத்துடன், இன்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சியிலும், மட்டக்களப்பிலும் கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் சிங்கள – பௌத்த மயமாக்கப்படுதல், இந்தப் பகுதிகளில் தமிழர்களைச் சிறுபான்மையினராக்கும் நோக்கில் திட்டமிட்ட குடியேற்றங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி, இறுதிப் போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலைக்கு நீதி, தமிழ் மக்களுக்கான நிலையான அரசியல் தீர்வு என்பவற்றை வலியுறுத்தியே வடக்கு – கிழக்கில் இன்று கரிநாள் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



# மன்னாரில் வெதுப்பகம் ஒன்றின் மீது சுகாதாரத் துறையினர் நடவடிக்கை

(மன்னார் நிருபர்)

மன்னார் நகர சபை எல்லைக்குள் நீண்டகாலமாக இயங்கி வந்த வெதுப்பகம் ஒன்றில் சுகாதாரச் சீர்கேடுகள் நிறைந்து காணப்பட்ட நிலையில் சுகாதாரத்துறை வெதுப்பகத்தின் மீது பல்வேறு பிரிவுகளில் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் மற்றும் அதிகாரிகள், மன்னார் நகரசபை சுகாதார உத்தியோகத்தர் இணைந்து மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின் போது இந்த வெதுப்பகம் சுகாதார சீர்கேட்டுடன் பல நாகள் இயங்கி வந்தமௌ கண்டறியப்பட்டது.

இந்த வெதுப்பகம் உரிய அனுமதி இல்லாமல் இயங்கி வந்தமை, அத்துடன் வெதுப்பக ஊழியர்கள் மருத்துவ சான்றிதழ் இன்றி பணியாற்றியமை போன்றவை கண்டறியப்பட்டமையைத் தொடர்ந்து உணவகம் முழுவதையும் சுகாதாரத் துறையினர் பார்வையிட்டனர்.

அதில் பழுதடைந்த பாண்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை, சுகாதார மற்ற முறையில் பாண்கள் தயாரிக்கப்பட்டிருந்தமை, எலி நடமாட்டம் அதிகளவில் காணப்பட்டமை, உணவுகளில் பல்லி எச்சம் காணப்பட்டமை, உணவுப் பொருள்களில் தூசுகள் கணப்பட்டமை உள்ளடங்கலாகப் பல்வேறு சுகாதார குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

இதனை தொடர்ந்து சுகாதார துறையினர் இந்த வெதுப்பகம் மற்றும் வெதுப்பக ஊழியர்கள் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்கு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஏன் இன்று கரிநாள்?

இலங்கைக்கு இன்று சுதந்திரதினம். வெள்ளையரின் காலனித்துவ ஆட்சியில் இருந்து இலங்கைத் தீவு விடுதலை பெற்ற நாளாக இதனை தென்னிலங்கை சிங்கள் மக்கள் பெரும் உவகையுடன் கொண்டாடுகின்றார்கள்.

ஆனால் இந்த இலங்கைத் தீவின் வடக்கையும் கிழக்கையும் வரலாற்றுப் பூர்வீகத் தாயகமாகக் கொண்ட ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இது கொண்டாட்டத்துக்குரிய நாளன்று. சுதந்திர தினமன்று. இது அடிமைத்துவத் தினம். கரிநாள். கறுப்பு நாள். அடக்குமுறை வேதனையின் ஆதங்கங்களை வெளிப்படுத்தும் அவல நாள்.

தென்னிலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பௌத்த - சிங்களவர்களுக்கே இத்தினத்தில் ஆங்கிலேயே ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரமும், விடுதலையும், சுயாட்சியும் கிடைத்தன. அத்தோடு தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்பு அதிகாரமும் கூட அவர்களுக்கு இத்தினத்தில் கைமாறியது. அதனை நோக்கினால், தமிழர் தேசத்தை சிங்களவர் தேசம் அடிமைப்படுத்திய தினமாகவும், தமிழர் தேசம் சிங்களத்திடம் அடிமைப்பட்ட நாளாகவும் இது அமைவது புரியும்.

அதனால்தான் இத்தினத்தைக் கறுப்பு நாளாகத் தமிழர் தேசம் சோகத்துடன் அனுஷ்டிக்கின்றது.

இலங்கை தீவில் முதல் அந்நிய ஆதிக்க சக்தியாக போர்த்துக்கேயர்கள் காலடி எடுத்து வைத்தது 1505 இல். அப்போது இலங்கை தீவில் தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனி இறைமை கொண்ட இரு வெவ்வேறு இராச்சியங்களில் வசித்து வந்தனர். காலப்போக்கில் இந்த இரண்டு இராச்சியங்களும் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லந்தரிடமும் பின்னர் ஆங்கிலேயரிடமும் வீழ்ந்து போனமை வரலாறு. இப்படி இரண்டு இராச்சியங்களாகப் போர்த்துக்கேயராலும், பின்னர் ஒல்லாந்தரினாலும், அதைத் தொடர்ந்து ஆரம்பத்தில் ஆங்கிலேயராலும் நிர்வகிக்கப்பட்ட இலங்கை தீவை 1833 ஆம் ஆண்டு வெள்ளையர்கள் தங்கள் நிர்வாக வசதிக்காக ஒரு குடையின் கீழ் - ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தனர்.

அந்த ஆட்சி முறையை அடுத்த 115 வருடங்களுக்குத் தொடர்ந்த வெள்ளையர்கள், தங்கள் நிர்வாக வசதிக்காகத்தாங்கள் ஒன்றிணைத்த இரண்டு இராச்சியங்களையும் - தமிழர் தேசத்தையும் சிங்களவர் தேசத்தையும் - தாங்கள் 1948 இல் அதிகாரத்தை கையளித்து இலங்கைத் தீவில் இருந்து புறப் பட்ட போது, அட்சர கணித எண்ணிக்கைக் கணக்கில் பெரும்பான்மையினரான சிங்களவரின் கைகளில் ஒப்படைத்துச் சென்றனர்.

இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தின் இறைமை இப்படித்தான் முதலில் போர்த்துக்கேயராலும், பின்னர் ஒல்லாந்தரினாலும், அதைத் தொடர்ந்து வெள்ளையரினாலும் ஆக்கிரமிக்கப்பட்டு, அடிமைப் படுத்தப்பட்டு இருந்த நிலையில், கடைசியில் 1948 பெப்ரவரி 4ஆம் திகதி தீவின் பெரும்பான்மையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆகவே தமிழர் தேசத்தின் தனித்துவ சுதந்திரமும் இறைமையும் அவற்றைக் கைப்பற்றி வைத்திருந்த வெள்ளையரின் காலனித்துவத்திடமிருந்து சிங்கள பௌத்த பேரினவாதிகளின் கைகளுக்கு மாறிய நாளைக் கொண்டாடுவதற்கோ, அனுஷ்டிப்பதற்கோ தமிழரிடம் ஏதுமில்லை. அடிமைத்தனத்தின் மீதான மேலாதிக்க உரிமை வெள்ளை ஏகாதிபத்தியத்திடமிருந்து பௌத்த - சிங்களப் பேரினவாதத்திடம் கைமாறியமையை ஒட்டி துக்கம் கொண்டாடுவதைத் தவிர.

# காத்தான்குடி யுவதி மீது பாலியல் துஷ்பிரயோகம் கைதான சட்டத்தரணிக்கு 17வரை விளக்கமறியல்

## பிரதேச செயலர் உட்பட இரு அலுவலர்களைக் கைது செய்ய உத்தரவு

**(கனகராசா சரவணன்)**

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் உள்ள பிரதேசம் ஒன்றில் இளம் யுவதி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டு 3 மாத கர்ப்பிணியாக்கிய சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட சட்டத்தரணியைத் தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் பிரதேச செயலாளர் மற்றும் அவரின் அலுவலகத்தில் பணியாற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய இருவரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தும்படியும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் குழு அமைத்து விசாரணை செய்யுமாறும் நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

மட்டு. நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் சட்டத்தரணியாகச் செயல்பட்டு வரும் சட்டத்தரணி ஒருவர் தனது பிரதேசத்தில் அமைந்துள்ள காரியாலயத்தில் கடமையாற்றி வந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய யுவதி ஒருவருக்கு உணவில் மயக்க மருந்து கலந்து கொடுத்து அவரைப் பலாத்காரமாக வல்லுறவுக்கு உட்படுத்தி 3 மாதக் கர்ப்பிணியாக்கினார் என்று கூறப்படுகின்றது. சம்பந்தப்பட்ட சட்டத்தரணியை கடந்த மாதம் 30 ஆம் திகதி பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவரை நேற்று 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட சந்தேக நபரான சட்டத்தரணி நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது சட்டத்தரணி சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி பிரேம்நாத் தலைமையில் சட்டத்தரணிகள் ஆஜராகினர். வழக்காளி சார்பில் சட்டத்தரணி றிஸ்வி தலைமையில் சட்டத்தரணிகளான யோகேஸ்வரன், உவைஸ், ரூபி, உதயாகரன், சுதர்சன், கமலதாசன், நஜீபா, ரம்சியா, தவராசா, சசிதரன் ஆகியோர் முன்னிலையாகி சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் தங்களின் விசாரணைக்கு ஒத்துழைக்க முடியாது என தெரிவித்து விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை, அதனால் விசாரணை முடியவில்லை என நீதிவானிடம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான சட்டத்தரணியை தொடர்ந்து எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டமையுடன் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காத பிரதேச செயலாளர் மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய இருவரையும் கைது செய்யுமாறும், உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் குழு ஒன்றை அமைத்து விசாரணை செய்யுமாறும் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்குக் கட்டளை பிறப்பித்தார்.

# களவு மாட்டை வெட்டி இறைச்சியாக்கிய மூவர் வெகனார் வாகனத்தில் அதனுடன் சிக்கினர்!

## புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் சம்பவம்







**(சண்முகம் தவசீலன்)**

புதுக்குடியிருப்பில் வெகனார் வாகனத்தில் மாட்டு இறைச்சியுடன் மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். மூவரும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மக்களது வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படுகின்ற கால்நடைகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக விற்பனையாகின்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து நேற்று முன்தினம் களவாடப்பட்ட மாடு ஒன்று புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் இருக்கின்ற குப்பை கொட்டுகின்ற பகுதியிலே இறைச்சியாக்கப்பட்டு வெகனார் வாகனத்தில் ஏற்றப்பட்ட நிலையில், வெகனார் வாகனத்துடன் மூவரைப் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்று மூவரையும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது அங்கு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய அதிகாரி தி.ஜனன் அந்தப் பகுதியில் மேலும் நான்கு மாடுகளின் மண்டை ஓடுகள் காணப்பட்டன எனவும் இவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

மூவரையும்10ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# தற்காலிக சாரதி அனுமதிப்பத்திர வழங்கல் மேலும் 5 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தல்




வெளிநாட்டுப் பிரஜைகள், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் இரட்டை குடியுரிமை கொண்ட இலங்கையர்களுக்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் சேவை மேலும் 5 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க இது தொடர்பான மேலதிக விபரங்களை வெளியிட்டுள்ளார்.

இதுவரை வெரஹெர அலுவலகம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய அலுவலகம் ஆகியவற்றில் மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த சேவை, இனிவரும் காலங்களில் யாழ்ப்பாணம், குருநாகல், அம்பாந்தோட்டை, கம்பஹா மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்ட அலுவலகங்களிலும் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்லுபடியாகும் வெளிநாட்டு சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ள நபர்கள், இலங்கையில் தற்காலிகமாக வாகனங்களைச் செலுத்துவதற்காக இந்த உரிமத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வெளிநாட்டு சாரதி அனுமதிப்பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற விரும்புவோர், தொடர்ந்தும் வெரஹெரவிலுள்ள பிரதான சாரதி அனுமதிப்பத்திர அலுவலகத்திற்கே செல்ல வேண்டும் என ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி இந்தச் சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

# தரம் 6 புதிய பாடத்திட்டம் மீளப் பெறப்படவில்லை

## பிரதமர் ஹரிணி சபையில் விளக்கம்



இலங்கையின் முன்மொழியப்பட்ட கல்வி சீர்திருத்தங்களின் கீழ், ஆறாம் வகுப்புக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பாடநெறித் தொகுதிகள் எதுவும் மீளப் பெறப்படவில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஆறாம் வகுப்புக்கான கல்வி சீர்திருத்தங்களை 2027 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆறாம் வகுப்பின் முதலாம் தவணைக்கான பாடநெறித் தொகுதிகள் மட்டுமே இதுவரை அச்சிடப்பட்டுள்ளன.

அவற்றில் எவையும் நிராகரிக்கப்படவோ அல்லது நீக்கப்படவோ இல்லை.

இந்த பாடநெறித் தொகுதிகள் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வரும்போது பயன்படுத்தப்படும்.

அவற்றை அகற்றுவதற்கோ அல்லது நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதற்கோ தற்போது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

அச்சிடப்பட்டு களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டிருந்த ஆறாம் வகுப்புக்கான பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விநியோக நடவடிக்கைகள் பெப்ரவரி நடுப்பகுதிக்குள் நிறைவடையும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

புதிய பாடத்திட்டம் இன்னும் நடைமுறைக்கு வராததால், ஆசிரியர்கள் தற்போதுள்ள பாடத்திட்டத்தின் கீழ் வகுப்பறை கற்பித்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.” என்று தெரிவித்தார்.









# முல்லை மாவட்டத்தில் அரச காணிகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று செயலகத்தில்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற காணி தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்றைய தினம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் காணி தொடர்பான செயற்பாடுகளின் தற்போதைய நிலை தொடர்பில் முக்கியமாக கலந்துரையாடப்பட்டது.

காணிப்பத்திரம் இல்லாதவர்களுக்கான பதிவுகளை மேற்கொள்ளல், அளிக்கைப்பத்திரம் வழங்குதல், “கினிகம“ திட்டத்தினூடாக வழங்கப்படவுள்ள உறுதிப்பத்திரங்கள், குத்தகை அடிப்படையிலான காணி வழங்கல், குத்தகையைப் பெற்றுக்கொள்ளல், சட்டவிரோதமாக அரச காணிகளை கையகப்படுத்தியுள்ளோருக்கான நடவடிக்கைகள் எனப் பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடல் வட மாகாண காணி ஆணையாளர் குருபரனின் பங்குபற்றலுடன் நடைபெற்றது. கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) திருமதி. எஸ்.மஞ்சுளாதேவி , மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.ஜெயக்காந்த், மாவட்ட செயலக காணிப் பகுதி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலங்களின் காணிப் பகுதி உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்துகொண்டனர்.







# கிவுல் ஓயாத் திட்டத்திற்கு எதிரான போராட்டத்தை காரணமாக வைத்துப் பழிவாங்கும் பிரதி அமைச்சர்

## வவுனியா வடக்கு பிரதேசசபை தவிசாளர் குற்றச்சாட்டு

(கி.வசந்தன்)

கிவுல் ஓயாத் திட்டத்தை நிறுத்தக் கோரி இடம்பெற்ற போராட்டத்திற்குப் பழி வாங்கும் விதமாக பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க செயற்படுகின்றார் என வவுனியா வடக்கு பிரதேச்சபையின் தவிசாளர் தி.கிருஷ்ணவேணி குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியா தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிவுல் ஓயாத்திட்டம் வேண்டாம் என்று எமது தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தோம். அந்த போராட்டத்தின் விளைவாக எனக்கு அரச தரப்பால் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அந்வகையில் இன்றையதினம் (03 ஆம் திகதி) வெலிஓயா என மாற்றப்பட்ட மணலாறு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இடம்பெற்றது. அதில் நான் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தேன்.

அந்தக் கூட்டத்தில் எனக்கு வழமையாக ஒதுக்கப்படும் இடத்தில் அமர்வதற்கு நான் சென்ற போது அங்கு அமர வேண்டாம் என ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் உபாலி சமரசிங்க தெரிவித்திருந்தார்.

அதுதொடர்பாக நான் அவரிடம் விளக்கம் கேட்டபோது, இதுவே நடைமுறை என கூறினார். வழமையாக கூட்டம் இடம் பெறும் போது எனக்கு வழங்கப்பட்டு வந்த இடத்திலேயே நான் அமரச் சென்றேன். அத்துடன் கூட்டம் ஆரம்பிக்க முன்னரே தமிழ்மொழி பெயர்ப்பு தேவை என்பதை பிரதேச செயலாளரிடம் வலியுறுத்தியிருந்தேன். ஆனால் அந்த விடயம் கவனத்தில் கொள்ளப்படவில்லை.



எனவே, என்னை அவமதிக்கும் நோக்கிலேயே இவ்வாறான செயற்பாட்டை மேற்கொள்கிறீர்கள் என ஒருங்கிணைப்பு குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தேன். மக்களின் பிரச்சினைகளை அறிவதற்காக இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள சென்ற போதும் மக்கள் பிரதிநிதி என்று பாராமல் அவர்கள் அவமதித்துள்ளனர். இதனால் இக்கூட்டத்தில் இருந்து நான் வெளிநடப்பு செய்வதாக அறிவித்துவிட்டு வெளியேறிவிட்டேன்.

இது ஒரு அநீதியான பழிவாங்கும் செயற்பாடு. நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். எமக்கு இந்த கதிரை முக்கியம் அல்ல. கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிராக இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் விளைவே எனக்கான இருப்பிடம் மறுக்கப்பட்டதற்கான காரணமாக உள்ளது. ஆனால் என்ன நடந்தாலும் கிவுல் ஓயாத்திட்டம் நிறுத்தப்படும் வரை எமது குரல்கள் ஓங்கி ஒலிக்கும்.

எங்களது எதிர்ப்பை தொடர்ச்சியாகவே நாங்கள் காட்டுவோம். எமது மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தொடர்ச்சியாக குரல் கொடுப்போம். - என்றார்.

# 14 வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் குற்றவாளிக்கு முப்பது வருடக் கடூழியச் சிறை

## கல்முனை மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு

(பாறுக் ஷிஹான்)

14 வயது சிறுமி மீதான பாலியல் துஷ்பிரயோக வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட நபரை பத்து லட்சம் ரூபா நஷ்ட வழங்கும்படியும், தவறும்பட்சத்தில் 30 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்தும் தீர்ப்பளித்துள்ளது கல்முனை மேல் நீதிமன்றம்.

இந்த வழக்கு விசாரணைகள் கல்முனை மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் இடம்பெற்றிருந்தன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த வழக்கில்கல்முனை மேல் நீதிமன்றமுன்னாள்நீதிபதிஜயராம்ட்ரொக்ஸி வழங்கிய தீர்ப்பை கல்முனை மேல் நீதிமன்றத்தின் தற்போதைய நீதிபதி அந்தனிப்பிள்ளை ஜுட்சன் வாசித்தார்.

2020 தொடக்கம் 2021 வரை இந்தச் சிறுமி 3 தடவைகள் வரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகி வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டமையுடன் சிறுமி கர்ப்பமடைந்து ஆண் குழந்தை ஒன்றையும் பிரசவித்துள்ளார்.




27 வயதுடைய குற்றவாளி பாதிக்கப்பட்ட சிறுமியின் சகோதரியின் கணவர் என்பதுடன் அவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டத்தரணி மாதினி விக்னேஸ்வரன் ஆஜராகி இருந்தார்.

இதன் போது ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் ரூபா 10 ஆயிரம் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

தண்டப்பணத் தொகையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் 6 மாத கால சாதாரண சிறைத் தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 10 லட்சம் ரூபா நஷ்டஈட்டுத் தொகையும் வழங்கப்பட வேண்டும் எனவும் அதனை செலுத்த தவறின் 1 மாத கால சாதாரண சிறைத்தண்டனையும் நஷ்டஈடு செலுத்தாத விடத்து 3 குற்றச்சாட்டிற்கும் தலா 10 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் ஒன்றன் பின் ஒன்றாகக் கழிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

# கிவுல் ஓயாவுக்கு நீர் வழங்க நிதி உள்ளது மட்டக்களப்பு மக்களுக்கு வழங்க இல்லை

## அரசின் நோக்கம்தான் என்ன என்று சாணக்கியன் கேள்வி




கிவுல் ஓயாவுக்கு குடி தண்ணீர் வழங்க நிதி ஒதுக்கிய இந்த அரசாங்கத்திற்கு ஏன் மட்டக்களப்பில் இருக்கும் மக்களுக்கு அடிப்படைத் தேவையான குடி தண்ணீரை வழங்க நிதியை ஒதுக்க முடியாதுள்ளது?

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி எழுப்பினார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

நேற்றைய தினம் நாடாளுமன்ற கேள்வி பதிலின் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள வவுணத்தீவு பகுதியில் அமைந்துள்ள பனை அறுப்பன், பான் சேனை, வடக்கல் மாது, பாவற்கொடிச்சேனை, உன்னிச்சை மற்றும் நெடியமடு ஆகிய கிராமங்களுக்கு இதுவரை குடிதண்ணீர் வசதிகள் வழங்கப்படவில்லை என சாணக்கியன் எம்.பியினாக் சுட்டிக்காட்டப்பட்டது.

உன்னிச்சைப் பகுதியில் இருந்து பிற பகுதிகளுக்கு குடி தண்ணீர் விநியோகிக்கப்படும் நிலையில், அதே பகுதி மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கப்படாத நிலை குறித்து கேள்வி எழுப்பிய சாணக்கியன் இதுதொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு குடி தண்ணீர் வசதிகளை வழங்க அரசால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவை நடைமுறைக்கு வரும் காலக்கெடு குறித்து அமைச்சரிடம் விளக்கம் கோரப்பட்டது.

உன்னிச்சை பிரதேசத்தில் ஐம்பது வீதத்திற்கும் அதிகமானோருக்கு குடி தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தஅதேவேளைகுடிதண்ணீர்இணைப்புக்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை 217 எனக் குறிப்பிடுகின்றார் அமைச்சர். வவுணதீவு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட உன்னிச்சை, பனையறுப்பான், வாதாகல்மடு, பன்சேனை, பாவற்கொடிச்சேனை, நெடியமடு, ஆயித்தியமலை போன்ற பிரதேசங்களில் குடி தண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்த அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட இரண்டு வரவு – செலவுத் திட்டங்களிலும் எவ்வித முன்மொழிவும் மொழியப்படவில்லை. ஆனால் மணலாறு பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்ட பெரும்பான்மை சமூகத்திற்கு குடி தண்ணீர் வழங்க 23,000 மில்லியன் ரூபா வரவு – செலவுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்டுள்ளது. சிங்கள மக்களுக்கு குடி தண்ணீர் வழங்க உங்களிடம் பணம் உண்டு ஆனால் வவுணதீவு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மக்களுக்கு குடி தண்ணீர் வழங்க உங்களிடம் பணமில்லை. இது எவ்விதத்தில் நியாயம்? பத்தாயிரம் பேருக்கு குடி தண்ணீர் வழங்க நீங்கள் ஒதுக்கியுள்ள 23,000 மில்லியன் ரூபாயில் 10 வீதமான நிதி எம் மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கப் போதுமானது.

குடி தண்ணீர் என்பது மனிதனுடைய அடிப்படைத் தேவை. ஏறாவூர்பற்று, பட்டிப்பளை, போரதீவுப்பற்று போன்ற இடங்களுக்கும் குடி தண்ணீர் வசதிகளை வழங்க எந்த திட்டங்களும் முன்மொழியப்படவில்லை. உயரமான பிரதேசங்களுக்கு Community Water Supply Service ஒன்றினை செய்து அவற்றை பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்க வேண்டும். 23,000 மில்லியன் ரூபா வரவு – செலவுத் திட்டத்திலே கிவுல் ஓயாவிற்கு குடி தண்ணீர் வழங்க நிதி ஒதுக்கிய இவ் அரசாங்கத்திற்கு ஏன் மட்டக்களப்பில் இருக்கும் மக்களுக்கு அடிப்படைத் தேவையான குடிநீரை வழங்க நிதியினை ஒதுக்க முடியாதுள்ளது? – இவ்வாறு சாணக்கியன் எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் மேலும் கேட்டார்.

# சுதந்திர தினத்தில் தமிழ்த் தேசியக் கருத்தரங்கு

இன்று 4 ஆம் திகதி புதன் கிழமை சிறிலங்காவின் சுதந்திரதின கொண்டாட்டங்கள் கோலாகலமாக நிகழும் வேளையில் தமிழ்த் தேசியத்தை முன்நிறுத்தி யாழ்ப்பாண நகரில் அரசியல் கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விடுதலைக் கவிஞர் பாரதியாரின் “என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?” என்ற பிரபலமான கவிதை வரிகளை தலைப்பாக கொண்டு இக் கருத்தரங்கு நிகழவுள்ளது.

தமிழ்த் தேசிய பேரவையின் சார்பில் அதன் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான தமிழ்த் தேசியக் கட்சி இந் நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது.

யாழ்ப்பாண கச்சேரிக்கு அருகில் உள்ள வை.எம் சி.எ மண்டபத்தில் இன்று பிற்பகல் 03.00 மணிக்கு இக் கருத்தரங்கு ஆரம்பமாகும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வல்வெட்டித்துறை நகரசபை தலைவருமான எம்.கே சிவாஜிலிங்கம் நிகழ்விற்கு தலைமை வகிப்பார்.

தமிழ்த் தேசிய பேரவையின் பிரமுகர்களும் பிரபல அரசியல் விமர்சகர் நிலாந்தனும் உரையாற்றவுள்ளனர்.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய அபிமானிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய பேரவையின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# வாக்காளர் பட்டியலில் பெயர்களை உறுதிப்படுத்துமாறு வேண்டுகோள்

2026 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் பெயர்களைப் பதிவு செய்யும் பணிகள் கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ள நிலையில், தகுதியுள்ள அனைத்துப் பிரஜைகளும் தமது பெயர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துமாறு "சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கம்" கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் 2027 ஜனவரி 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 18 வயது பூர்த்தியடையும் இளம் பிரஜைகள், தத்தமது பிரதேச கிராம அலுவலர் மூலம் YC படிவத்தைச் சமர்ப்பித்துத் தம்மைப் பதிவு செய்துகொள்ளுமாறு பெஃப்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கடந்த வருட வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாத, ஆனால் தற்போது வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளவர்கள் ER படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும் என அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பெஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி,


"தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாக்காளர் பட்டியலில் பெயர் இருப்பது அவசியமானது. இது ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படை உரிமை மாத்திரமன்றி, ஒரு சிவில் கடமையுமாகும்.

எனவே, பொது மக்கள் இது குறித்துத் தமது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்." என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலதிக விபரங்களுக்குத் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.elections.gov.lk என்ற முகவரிக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நிலக்கரி பிரச்சினை தொடர்பில் பரப்பப்படும் பொய்யான தகவல்

## வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவிப்பு



நிலக்கரி பிரச்சினை தொடர்பாகப் பொறுப்பற்ற வகையிலான பொய்யான தகவல்களை சமூகமயப்படுத்துவதைத் தவிர்க்குமாறு வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி நாடாளுமன்றில் எதிர்க்கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நிலக்கரி இறக்குமதியின் போது கேள்விப் பத்திர முறைமையையோ அல்லது விபரக்குறிப்பு முறைமைகளையோ மாற்றவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலக்கரியின் தரம் குறித்து விசேட நிலைமை ஏதேனும் ஏற்பட்டால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் கொள்முதல் செயன்முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமையவே தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்தார்.

மேலும், நிலக்கரி விநியோகம் அல்லது அதன் தரம் தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட முறைமைக்கு அமைவான முறைமை ஒன்று கேள்வி பத்திர செயன்முறைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமையவே செயல்பட்டுள்ளதால் தவறான கூற்றுக்களை வெளியிட வேண்டாம் எனத் தான் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்வதாகவும் வலுசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயகொடி தெரிவித்தார்.



# பொருளாதார மத்திய நிலையங்களின் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்தன

விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் விலைப்பட்டியலுக்கு அமைய நேற்று, நுவரெலியாவில் கோவா ஒரு கிலோகிராம் 260 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், வவுனியாவில் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

கரட் ஒரு கிலோகிராம், நுவரெலியாவில் 340 ரூபாவுக்கும், வுனியாவில் 380 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டதுடன், பீட்ரூட் ஒரு கிலோகிராம் நுவரெலியாவில் 280 ரூபாவுக்கும் வவுனியாவில் 350 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

அண்மையில் அதிக கேள்வி நிலவிய, கறிமிளகாய் ஒரு கிலோகிராம் வவுனியாவில் 850 ரூபா விற்பனை செய்யப்பட்டதுடன், நுவரெலியாவில் 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

தொடர்ந்து குடை மிளகாய் வகைகளுக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில், நுவரெலியாவில் நேற்று சிவப்பு குடைமிளகாய் ஒரு கிலோகிராம் 4,100 ரூபாவுக்கும், மஞ்சள் குடை மிளகாய் ஒரு கிலோ கிராம் 4,100 இற்கும், பச்சை குடை மிளகாய் ஆயிரத்து 900 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை வவுனியாவில் குடைமிளகாய் ஒரு கிலோகிராம் 950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

ஒரு கிலோகிராம் லீக்ஸ் நுவரெலியாவில் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதுடன், வவுனியாவில் 380 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

ஒரு கிலோகிராம் உருளைக் கிழங்கு வவுனியாவில் 375 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், நுவரெலியாவில் 370 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாக சந்தைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

# சபாநாயகர் அலுவலகத்தில் ‘கொத்து’ விருந்து நடந்தது

## சாமர சம்பத் விமர்சனம்

நாடாளுமன்ற சபாநாயகரின் தவறான நடத்தையே, நாடாளுமன்ற பிரதி பொதுச் செயலாளர் தொடர்பாக தேவையற்ற சிக்கல்கள் ஏற்பட வழிவகுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க நேற்று சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

“சில நபர்களுக்கு சபாநாயகர் “கொத்து“ வழங்கிய செயலில் இருந்தே இந்தப் பிரச்சினை உருவானது. மக்களுக்கு உணவளிக்க வேண்டிய இடங்கள் இருக்கின்றன. ஒருவர் தனது அலுவலகத்தில் வைத்து இவ்வாறான செயல்களைச் செய்ய முடியாது,” என்றார்.

தேவையற்ற பிரச்சினைகளை எவரும் உருவாக்கக் கூடாது என்றும் அவர் இதன்போது மேலும் சுட்டிக்காட்டினார்.



# சிங்களவர்களிடம் இந்த நாட்டை பிரித்தானியர்கள் கையளித்தில் இருந்து தமிழருக்கு இது கரிநாளே!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தர்மலிங்கம் சுரேஷ் விளக்கம்

(கனகராசா சரவணன்)

இந்த நாட்டை பிரித்தானியர்கள் சிங்களவர்களிடம் கையளித்ததில் இருந்து தொடர்ச்சியாக தமிழர்கள் இந்த நாளை கரிநாளாக அனுஷ்டித்து வருகின்றனர். எனவே பல்கலைக்கழக மாணவர்கள் காணாமல் போன உறவுகள் , மற்றும் பொது அமைப்புக்கள் முன்னெடுத்து வரும் இந்த கரிநாள் போராட்டத்திற்கு மக்கள் வலுச்சேர்க்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வொய்ஸ் ஒவ் மீடியா கற்கை நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.




இந்த நாட்டிலே தமிழர் தாயகம் எங்கும் இந்த நாளை ஒரு கரிநாளாகப் பிரகடனப்படுத்தி பல போராட்டங்கள் நடைபெறவுள்ளன. அதனடிப்படையில் வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் கரிநாள் எதிர்ப்புழு போராட்டம் இடம்பெறவுள்ளது.

பிரித்தானியர்கள் 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி இந்த நாட்டை ஒரு சிங்கள தேசிய வாதத்திடம் கையளித்ததில் இருந்து தமிழர்களை பொறுத்தமட்டில் இந்த நாளை தொடர்ச்சியாக ஒரு கரி நாளாக அனுஷ்டித்து வருகின்றனர்.

பல்லின மக்கள் வாழுகின்ற சூழ்நிலையில் நாட்டினுடைய சிங்கள தேசியவாதிகளான ஆட்சியாளர்கள் பிரித்தானியர்கள் கையளித்தில் இருந்து ஏனைய மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி வருகின்ற நிலமையினால் இந்த நாளை சிறுபான்மை மக்கள் கரிநாளாக அனுஷ்டிக்கின்றனர்.

இந்த நாடு தெற்கு ஆசிய பிராந்தியத்தில் ஒரு முன்னிலையாக வரவேண்டிய நாடு. துரதிர்ஷ்டவசமாக இந்தச் சிங்கள தேசிய ஆட்சியாளர்கள் தங்களுடைய நலனை மட்டுமே முன்னிலைப்படுத்திக் கொண்டு செல்வதால் இந்த நாடு வளர்ச்சிப் பாதையில் இருந்து பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

தமிழர்கள் அடிமைப்படுத்தப்பட்டு வருகின்ற இந்த நிலைமையிலே பெரும்பான்மையாக இருக்கும் சிங்கள மக்கள் இந்த நாளை சுதந்திர நாளாகக் கருதி அவர்கள் கொண்டாடினாலும் தமிழ் மக்கள் இந்த நாளை கரிநாளாக அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஏன்னென்றால்இந்தவளர்ச்சிபாதையை தடுப்பது சிங்கள தேசியவாதம். இந்த நாட்டின் அரசமைப்பு 1948 பிற்பாடு ஓர் ஒற்றையாட்சி அரசமைப்பாக – ஓர் அடிமை சாசனமாக – இருப்பதால் இந்த அரசமைப்பில் உள்ள சட்டங்கள் ஓர் இனத்தை அடக்கி ஒடுக்குகின்றன. அந்த அடக்குமுறை என்பது சிங்கள மக்களையும் முழுமையாகப் பாதிக்கின்றது.

எனவே வடக்கு கிழக்கில் நடக்கும் கரிநாள் நிகழ்வு சிங்கள மக்களுக்கு பொருத்தமாக அமைகிறது. இந்த நிலைமைகளை சிங்கள தேசம் விளங்கிக் கொண்டு அடிப்படை பிரச்சினைக்குக் காரணமாக இருக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பை மாற்றி, அதனை ஒரு சமஷ்டிக் கட்டமைப்பாக்கி, இந்த நாட்டிலே இருக்கின்ற பல்லின மக்கள் சம உரிமையுடன்–சுயநிர்ணயத்துடன்–அவரவர்அனுபவிக்க கூடியதாக அந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு ஆட்சியாளர்கள் முன்வரவேண்டும்.

அவ்வாறு முன் வருகின்ற பட்சத்தில் மட்டும்தான் இந்த நாட்டை கட்டியொழுப்பலாம். இங்கே அடிப்படைக் காரணமாக இருப்பது இந்த அடிமை சாசனம். தமிழர்கள்தானே நசுக்கப்படுகிறார்கள் என்ற மமதையில் இந்த ஆட்சியாளர்கள் இருப்பார்களாக இருந்தால் இந்த நாடு மீண்டும் ஒரு படுகுழியில் தள்ளப்படும். ஆகவே இந்த நிலைமைகளை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

1949 கல்லோயா திட்டம் தொடக்கம், 2009 கிவுல் ஓயாத் திட்டம் வரைக்கும் தமிழ் மக்களுடைய தேசம் குறிவைக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, அந்த தேசம் அழிக்கப்படுகின்றது. ஒற்றையாட்சி கட்டமைப்பு தான் தமிழ் தேசத்தை அழிக்கின்றது. எனவே இந்தக் கட்டமைப்பை மாற்றுவதற்கு ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும். சர்வதேச நாடுகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் இந்த நாட்டை பிரித்தானியர் கையளித்ததில் இருந்து தொடர்ச்சியாக தமிழர்கள் இந்த நாளை கரிநாளாக அனுஷ்டித்து வருகின்றனர். அதன் அடிப்படையில் வடக்கிலும் கிழக்கிலும் கரிநாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. வடக்கில் பல வர்த்தக அமைப்புகள், பொது அமைப்புகள் முழுமையான ஆதரவு வழங்குவதாகக் கூறியுள்ளன.

அதேபோல் கிழக்கில் உள்ள வர்த்தக நிலையங்கள், பொது அமைப்புக்கள், மக்கள் இந்த போராட்டத்துக்கு முழுமையாக ஒத்துழைத்து, வடக்கில் யாழ் பல்கலைக்கழகம், கிழக்கில் வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகம், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போன்ற தரப்புகள் முன்னெடுத்து வரும் இந்தப் போராட்டத்திற்கு அனைவரும் சேர்ந்து வலுச்சேர்க்க வேண்டும். – என்றார்.

# புதுக்குடியிருப்பில் வெகனார் வாகனத்துடன் ஐஸ் வைத்திருந்த ஐந்து இளைஞர்கள் கைது

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், புதுக்குடியிருப்பு பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப் பொருளுடன் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கை கோம்பாவில் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. மன்னார், வலைஞர்மடம், திம்பிலி மற்றும் கைவேலி ஆகிய பகுதிகளை சேர்ந்த 20 முதல் 28 வயதுக்குட்பட்ட ஐந்து இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெகனார் வாகனத்தில் போதைப் பொருளை விற்பனை செய்து கொண்டிருந்த போது திடிரென இடம்பெற்ற சோதனையில், 15 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் சந்தை பெறுமதி 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.




# மன்னாரில் விளையாட்டு மைதானத்தில் மத சிலை இளைஞர்களின் எதிர்ப்பை மீறி நகரசபை அனுமதி

## பல தரப்பினரும் அதிருப்தியும் விசனமும் தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் சாந்திபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த மாதம் தனி நபர் ஒருவரால் எந்த ஒரு அனுமதியும் இன்றி மத சிலை ஒன்று வைக்கப்பட்டது.

இந்த நிலையில் சாந்திபுர விளையாட்டு கழகத்தினால் அந்த மைதானத்தில் சிலை வைப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக எழுத்து மூலம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நகரசபை தலைவரின் வழிகாட்டலில் அந்த விளையாட்டு மைதானத்துக்கு முன்பு தனிநபர் ஒருவருக்கு சொந்தமான காணியில் சிலை மாற்றி வைக்கப்பட்டது. உரிய அனுமதி கிடைத்தால் மாத்திரம் சிலை விளையாட்டு மைதானத்தில் வைக்க அனுமதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து கடந்த மாதம் இடம்பெற்ற மன்னார் நகரசபை அமர்வில் இந்தச் சிலை வைக்கும் விடயம் தொடர்பாகப் பேசப்பட்டது. இரு உறுப்பினர்கள் சிலை வைக்க அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தனர்.

ஆனால் அங்குள்ள இளைஞர் கழகம் சிலை வைப்பதற்கு அனுமதிக்கவில்லை எனவும், காந்திபுரத்தில் உள்ள சில பொது அமைப்புகள் மாத்திரம் சிலை வைப்பதற்கு எதிர்ப்பு இல்லை என கடிதம் வாங்கியிருக்கின்றன எனவும், இது ஒரு முரண்பாடான விடயம், எனவே உரிய அமைச்சு மற்றும் ஆளுநரிடம் அனுமதிக்கு அனுப்பி, உரிய அனுமதி பெற வேண்டும் எனத் தவிசாளர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னனியில் நேற்று முன்தினம் எந்த ஓர் அனுமதியும் இன்றி – உரிய தரப்புக்கு அறிவிக்கப்படாமல் – மீண்டும் அந்தச் சிலை விளையாட்டு மைதானத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விளையாட்டுக் கழக பிரதிநிதிகள் மன்னார் நகரசபைத் தலைவரிடம் வினவியபோது அதற்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டதாகவும் சபையில் அனுமதி கிடைத்து விட்டதாகவும் தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் நகரசபை செயலாளரிடம் இளைஞர் கழக உறுப்பினர்கள் வினவிய போது, இவ்வாறான சிலைகள் வைப்பதற்கு சபை அனுமதி வழங்கவில்லை என்றும் அவ்வாறு வழங்குவதற்கு எந்த அதிகாரமும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் விளையாட்டுக்காக மைதானத்தை பயன்படுத்து விளையாட்டுக்கழகம் மற்றும் உரிய அரச நிறுவனங்களிடம் எந்த ஓர் அனுமதியும் பெறாது இந்தச் சிலை வைக்கப்பட்டுள்ளமை விமர்சனத்திற்குள்ளாகி உள்ளது.

இந்தச் சிலை முன்னதாக மாற்றி வைக்கப்பட்ட தனியார் காணியில் இருந்த போது எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதே நேரம் தற்போது அந்தச் சிலை அமைந்துள்ள இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் அதே மதச் சிலையும், 500 மீற்றர் தூரத்தில் அதே கோவிலும் இருக்கும் பட்சத்தில் இளைஞர்கள் விளையாடும் மைதானத்தில் ஏன் இந்தச் செயல்பாடு என இளைஞர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# நடிகர் ஹேமால் ரணசிங்க பிணையில் நேற்று விடுவிப்பு



கைது செய்யப்பட்ட நடிகர் ஹேமால் ரணசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கல்கிசை நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் சந்தேகநபர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் சரணடைந்த பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த ஜனவரி 08ஆம் திகதி ஹேவ்லொக் சிட்டி வளாகத்தில் நபரொருவர் தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைய அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.





# சிறந்த ஆட்சியை உருவாக்க அர்ப்பணிப்புடன் உள்ளோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

சட்ட விரோத பணப்பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான சர்வதேச தரநிலைகள் குறித்து இலங்கை எதிர்கொள்ளும் மூன்றாவது பரஸ்பர மதிப்பீடு தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

அரசாங்கம் என்ற வகையில், வெளித் தரப்பினருக்கு நமது தூய்மையை எடுத்துக் காட்டுவதற்கு முன், நாம் நமக்குப் பொறுப்பாகவும், சிறந்த ஆட்சியை நிலைநிறுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்காக நிறுவன மட்டத்தில் நமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுவோம் என்று அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

சட்ட விரோத பணப்பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான உலகளாவிய கொள்கைகளை நிதி நடவடிக்கை பணிக்குழு உருவாக்குகிறது. மேலும், பேரழிவு ஆயுதங்களை தயாரிப்பதற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான கொள்கைகளையும் இது உருவாக்குகிறது.

அதன்போது, அனைத்து நாடுகளும் பின்பற்ற வேண்டிய 40 பரிந்துரைகளை நிதி நடவடிக்கை பணிக்குழு தற்போது வெளியிட்டுள்ளது. இதன் மூலம்,சட்ட விரோத பணப்பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுக்க ஒவ்வொரு நாட்டிலும் நடைமுறையில் உள்ள கட்டமைப்புகள், அவை வினைத்திறனாக செயல்படுத்தப்பட்டுள்ள விதம், சட்டக் கட்டமைப்பு, வள ஒதுக்கீடு, செயல்திறன் மற்றும் தரப்பினர்களின் இயலுமை உள்ளிட்ட அளவுகோல்கள் தொடர்பாக ஆழமான பகுப்பாய்வு இடம்பெறும். இந்த செயல்முறை பரஸ்பர மதிப்பீடு என்று அழைக்கப்படுகிறது.

இது ஒரு தேசிய அளவிலான கணக்காய்வு செயல்முறை என்பதுடன், குறித்த பிராந்திய மேற்பார்வை நிறுவனத்தால் ஒருங்கிணைக்கப்படுகிறது. அதன்படி, சட்ட விரோத பணப்பரிமாற்றம் தொடர்பான ஆசிய பசுபிக் பிராந்திய குழுவினால் இலங்கையில் அந்த மதிப்பீட்டு மேற்பார்வை செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கான ஆலோசனையை அதன் முன்னாள் நிறைவேற்றுச் செயலாளரான கலாநிதி Gordon Hook வழங்குகிறார். உள்நாட்டில் இந்தச் செயல்பாட்டிற்காக சுமார் 25 தரப்பினர் அரச நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதுடன்,மேலும் அதன் ஒருங்கிணைப்புப் பணிகள், இலங்கை மத்திய வங்கியில் நிறுவப்பட்ட நிதி புலனாய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சட்ட விரோத பணப்பரிமாற்றத்தைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான செயற்பாட்டுக் குழுவினால், குறித்த மதிப்பீட்டுச் செயல்பாட்டின் போது இந்த தரப்பினர்களால் செயல்படுத்தப்பட வேண்டிய செயல் திட்டங்களின் முன்னேற்றம் கண்காணிக்கப்படும்.

இலங்கை இதற்கு முன்பு 2006 மற்றும் 2014-2015 ஆம் ஆண்டுகளில் இந்த மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன், அதில் பின்னடைவை சந்தித்து 2017ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

தற்போதைய அரசாங்கம் சர்வதேச அளவில் இலங்கையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்த வலுவான அரசியல் தலைமையை வழங்குவதால், இந்த திட்டத்தை ஒரு தேசிய முன்னுரிமையாகக் கருதி வெற்றிபெறச் செய்வதில் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டியதன் அவசியமும் கலந்துரையாடப்பட்டது.

நிலவும் சட்ட ரீதியான தடைகள் மற்றும் சட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள தாமதங்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த ஜனாதிபதி, அந்த

தொடர்ச்சி▼











# சிறந்த ஆட்சியை உருவாக்க அர்ப்பணிப்புடன் உள்ளோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

தொடர்ச்சி▲

விடயங்களை தாமதப்படுத்தாமல் தேவையான தொழில்நுட்ப திருத்தங்களை விரைவுபடுத்துமாறு அறிவுறுத்தினார்.

பல அரச நிறுவனங்களில் மனித வளப் பற்றாக்குறை மதிப்பீட்டுச் செயல்முறைக்குத் தடையாக உள்ளதாகத் தெரியவந்ததோடு, தற்போதுள்ள அதிகாரிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அவசர நடவடிக்கைகள் எடுக்குமாறும், நிர்வாக தாமதங்களைத் தவிர்க்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இருந்து ஓய்வு பெற்ற அனுபவம் வாய்ந்த அதிகாரிகளை ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.


ஒரே அதிகாரி பல பதவிகளில் பணியாற்றுவதால் ஏற்படும் சிக்கல்களை சீர்செய்வதற்கும், பொதுச் சேவை ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி பதவி உயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்புகளை விரைவுபடுத்துமாறும் பணிப்புரை விடுத்த ஜனாதிபதி , மதிப்பீட்டுச் செயல்முறைக்காகப் பயிற்சி பெற்ற அதிகாரிகளை தொடர்ச்சியாக இடமாற்றம் செய்வதால் ஏற்படும் பின்னடைவைத் தவிர்க்க, அடுத்த நவம்பர் மாதம் மதிப்பீடுகள் முடியும் வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதே பதவிகளில் பணியாற்றும் வகையில் சுற்றறிக்கை வெளியிடுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இந்த மதிப்பீட்டு செயல்முறையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சிறப்பு செயலணியின் அறிக்கை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா உட்பட அமைச்சின் செயலாளர்கள், சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க, பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் நளிந்த நியங்கொட, இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு, சட்டவரைஞர் திணைக்களம் உள்ளிட்ட தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.







# தமிழருக்கு எதிரான இனப்படுகொலைக்கு சர்வதேச விசாராணை நடத்த வேண்டும்

## சென்னையில் கையெழுத்து போராட்டம்

செம்மணி மனிதப் புதைகுழி உட்பட மறைக்கப்பட்டுள்ள அனைத்து மனிதப்புதைகுழிகள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தக்கோரி நடைபெற்றுவரும் தொடர் போராட்டங்களுக்கு ஆதரவாகவும், இது தொடர்பாக விசாரிக்க சர்வதேச சுயாதீன விசாரணை ஆணையத்தை ஐ.நா மனித உரிமை ஆணையர் அமைக்க வலியுறுத்தியும் சென்னையில் கையெழுத்து போராட்டம் இடம்பெற்றுள்ளது.

சென்னை – கொளத்தூரில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற வீரத்தமிழ் மகன் முத்துக்குமாரின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வின்போதே கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது செம்மணி – சிந்துபாத்தி மனிதப் புதைக்குழி அகழ்வு தொடர்பான நிழற்பட காட்சிகள் புகைப்பட காட்சிகளாக ஆவணப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதனை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் பொதுச்செயலாளர் வேணுகோபால் மற்றும் புலேந்திரன் முருகானந்தம் ஆகியோர் திறந்துவைத்தனர்.

முத்துக்குமார் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றிருந்த ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, திரைக் கலைஞர் சத்தியராஜ், தமிழ்த்தேசிய பேரியக்கத்தின் பொதுச்செயலாளர் கி.வெங்கட்ராமன், இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் உள்ளிட்டவர்கள் இதன்போது கையெழுத்து இட்டு வலுச்சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.












# நீதி மறுக்கப்பட்ட நாள்: சிறிலங்கா சுதந்திர தினம்! அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ் வலியுறுத்தல்

சிறிலங்காவின் 78வது சுதந்திர தினத்தில், உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் இந்த நாளை ஒரு கறுப்பு தினமாக நினைவு கூர்கின்றனர். இந்த நாள் தீர்க்கப்படாத ஒடுக்குமுறை, நீதி மறுப்பு மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான தொடர்ச்சியான பாகுபாட்டின் 78 ஆண்டுகளைக் குறிக்கிறது. சிறிலங்கா சுதந்திர தினமான பெப்ரவரி நான்காம் நாளினை, தமிழர்களின் நீதி மறுக்கப்பட்ட நாளாக அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ் வலியுறுத்தி உள்ளது.

தற்போதைய சிறிலங்கா அரசாங்கத்தின் கீழ், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் சீர்திருத்தம் குறித்த வாக்குறுதிகள் அர்த்தமுள்ள மாற்றமாக மாறவில்லை. நில அபகரிப்பு, சிவில் சமூகத்தின் கண்காணிப்பு, காணாமல் போனவர்களின் குடும்பங்களை அச்சுறுத்துதல் மற்றும் உளளூர் தமிழ் மக்களுக்கு அந்நியமான மதக் கட்டமைப்புகளை திணித்தல் ஆகியவை இன்னமும் குறையாமல் தொடர்கின்றன. அடக்குமுறை மிகவும் மறைமுகமான மற்றும் சட்டப்பூர்வமாக்கப்பட்ட வடிவங்களுக்கு மாறியுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு சீர்திருத்தத்தின் பிம்பத்தை வெளிப்படுத்தும் அதே வேளையில் கட்டமைப்பு அநீதி நீடிக்க அனுமதிக்கிறது.




அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் (ATC) இலங்கை அதன் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு (UNHRC) உறுதிமொழிகளை செயல்படுத்துவதில், சுயாதீனமான பொறுப்புக் கூறல்வழிமுறைகளைநிறுவுவதில்அல்லது உண்மையான அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளை மேம்படுத்துவதில் தொடர்ந்து தோல்வியடைந்ததை தீவிர கவலையுடன் குறிப்பிடுகிறது. உள்நாட்டு செயல்முறைகள் போதுமானவையாக இல்லை, சர்வதேச சட்டத் தரங்களைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டன, மேலும் வேரூன்றிய பாகுபாடு மற்றும் நிறுவனமயமாக்கப்பட்ட தண்டனையின்மை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை இழக்கின்றன.

பெப்ரவரி 4, 2026 அன்று, சிறிலங்காவின் சுதந்திர தினத்தை தமிழர்களுக்கான கருப்பு தினமாகக் குறிக்கும் வகையில், பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் விதமாகவும், நீதியைப் பெறுவதற்காகவும், தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் வெகுஜன எதிர்ப்புப் பேரணிகளுக்கு ஒற்றுமையாகவும் அமைதியான உலகளாவிய போராட்டங்களுக்கு யுவுஊ அழைப்பு விடுக்கிறது.

அவஸ்திரேலிய அரசாங்கமும் சர்வதேச சமூகமும் தமிழ் மக்களின் அமைதி, கண்ணியம் மற்றும் நீதியைப் பெறுவதில் அவர்களுடன் நிற்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் வலியுறுத்துகிறது.

தாமதப்படுத்தப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகவே கருதப்படும் என்று அது சுட்டுகின்றது.





# அமெரிக்க அழுத்தங்களுக்கு மோடி அடிபணிந்து விட்டார்

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு

இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் விவகாரத்தில், அமெரிக்காவின் அழுத்தத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிபணிந்துவிட்டார் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"பிரதமர் மோடி கலக்கம் அடைந்துள்ளார். கடந்த சில மாதங்களாக முடங்கி இருந்த இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தில் மோடி நேற்றிரவு கையெழுத்து இட்டுவிட்டார். அவர் மீது கடும் அழுத்தம் உள்ளது. அவரது "இமேஜ்" சேதமடையலாம். இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், பிரதமர் மோடி சமரசம் செய்து கொண்டார். பொதுமக்கள் இது குறித்து சிந்திக்க வேண்டும்.

இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் சமரசம் செய்து கொண்டதன் மூலம் பிரதமர் மோடி, மக்களின் கடின உழைப்பை விற்றுவிட்டார். நாட்டை அவர் விற்றுவிட்டார். நரேந்திர மோடி அச்சமடைந்துள்ளார். ஏனெனில், அவரது பிம்பத்தை வடிவமைத்தவர்களே இப்போது அதை உடைக்கிறார்கள்." என்று கூறினார்.

பிரதமர் மோடி சமரசம் செய்து கொண்டார் என்று எந்த அடிப்படையில் கூறுகிறீர்கள் என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த ராகுல் காந்தி,

"அமெரிக்காவில் அதானி மீது ஒரு வழக்கு உள்ளது. உண்மையில் அது மோடி மீதான வழக்கு. எப்ஸ்டீன் கோப்புகளில் இன்னும் வெளியிடப்படாத கோப்புகள் உள்ளன. இவை இரண்டும் அழுத்தத்துக்கான காரணிகள். இதை நாடு புரிந்து கொள்ள வேண்டும்." என தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற வளாகத்தில் பேசிய காங்கிரஸ் எம்பி சசி தரூர்,

"அந்த ஒப்பந்தத்தில் என்ன இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் விளக்கம் மட்டும்தான் கேட்கின்றன. அந்த ஒப்பந்தத்தில் என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை. அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் சமூக ஊடக பதிவும், பிரதமர் மோடியின் சமூக ஊடக பதிவும்தான் நம்மிடம் உள்ளன. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் இவை மட்டும் போதுமானதாக இருக்க முடியுமா?

இந்த ஒப்பந்தத்தில் இந்திய விவசாயம் தொடர்பாக என்ன இருக்கிறது என்பதை அரசு மக்களுக்கு விளக்க வேண்டும். இந்தியா அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டொலர் மதிப்புள்ள இறக்குமதிகளை மேற்கொள்ளும் என்று ட்ரம்ப் கூறியுள்ளார். நமது மொத்த இறக்குமதியே 700 பில்லியன் டாலர்தான். அப்படியானால், நாம் மற்ற நாடுகளில் இருந்து மேற்கொள்ளும் இறக்குமதிகளை நிறுத்தப் போகிறோமா? இந்த ஒப்பந்தம் தொடர்பான செய்தி நல்லதாக இருந்தால் நாங்கள் கொண்டாட விரும்புகிறோம்." எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இது தொடர்பாக மாநிலங்களவையில் பேசிய மத்திய அமைச்சர் ஜெ.பி. நட்டா,

"அமெரிக்க ஜனாதிபதி வரிகள் குறித்து சமூக ஊடக பதிவு ஒன்றை வெளியிட்டு, அதில் பிரதமர் மோடியை தனது உண்மையான நண்பர் என குறிப்பிட்டுள்ளார். அதன் பிறகு, பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு நன்றி தெரிவித்தும் வர்த்தகம் குறித்தும் குறிப்பிட்டு எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். இந்த வர்த்தக ஒப்பந்தம் குறித்து அரசாங்கம் தானாக முன்வந்து ஓர் அறிக்கையை வெளியிடும். மேலும், இது குறித்து விவாதமும் நடத்தும்." என்று தெரிவித்தார்.

# த.வெ.க சார்பில் பெப்ரவரி 6 முதல் விருப்ப மனு விநியோகிக்கப்படும்



தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களுக்கு பெப்ரவரி 6 ஆம் திகதி முதல் விருப்ப மனு விநியோகம் செய்யப்படவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையாகத் திகழும் தமிழக வெற்றிக் கழகம், அவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான நல்லாட்சியை வழங்கும் நோக்கில் விஜய் தலைமையில் தீவிரமாகக் களமாடி வருகிறது.

இந்தக் களத்தில் தேர்தல் அரசியல் என்பது, மிகவும் அத்தியாவசியமான ஒன்று. ஆட்சி அதிகாரம் நம் கையில் இருந்தால் மட்டுமே தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை முழுவதுமாக நிறைவேற்ற முடியும். தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

அந்த வகையில், வருகின்ற சட்டமன்றத் தேர்தலை நாம் எழுச்சியுடன் சந்திக்கின்றோம். தமிழகத்தின் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நம் வெற்றித் தலைவரின் ஆசி பெற்ற வேட்பாளராகப் போட்டியிட விரும்பும் கட்சி உறுப்பினர்கள் தங்களின் விருப்ப மனுக்களை அளிக்கலாம்.

இதற்கான விருப்ப மனுக்கள், எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் சனிக்கிழமை வரை த.வெ.க. தலைமை நிலையச் செயலகத்தில் வழங்கப்படுகின்றன. பெப்ரவரி 6 ஆம் திகதி அன்று நண்பகல் 12 மணி முதல், விருப்ப மனுக்களைப் பெறலாம். இதர நாள்களில் காலை 10.00 மணி முதல், மாலை 06.00 மணி வரை விருப்ப மனுக்களைப் பெறலாம். விருப்பம் உள்ளவர்கள் அவற்றைப் பெற்று, அதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் முழுமையாகப் பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் ஒப்படைக்க வேண்டும்." எனத் தெரிவித்துள்ளார்.



# ரஷ்ய - உக்ரைன் போர் நிறுத்தம்: அமைதிப் பேச்சு இன்று ஆரம்பம்

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இரண்டாம் கட்ட முத்தரப்பு அமைதிப் பேச்சுவார்த்தை, ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தலைநகர் அபுதாபியில் இன்று 04ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

இப்பேச்சுவார்த்தை நாளை 05 ஆம் திகதியும் நடைபெறும் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் டெலிகிராம் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“உக்ரைன் பேச்சுவார்த்தை குழுவிடமிருந்து எனக்கு அறிக்கை கிடைத்துள்ளது. இப்போருக்கு உண்மையாகவும், கௌரவமாகவும் தீர்வு காணும் நோக்கில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட நாங்கள் தயாராக இருக்கிறோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 4 ஆண்டுகளாக நீடித்து வரும் இப்போரை நிறுத்த, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் கடந்த ஓரண்டாகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, அபுதாபியில் ரஷ்யா, உக்ரைன், அமெரிக்கா ஆகிய 3 நாடுகளும் பங்கேற்கும் முத்தரப்புச் பேச்சுவார்த்தை இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை, ரஷ்யாவின் உயர்மட்டத் தூதுவர் கிரில் டிமிட்ரிவ், அமெரிக்காவின் புளோரிடாவில் அந்நாட்டின் அமைதித் தூதுக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அந்த ஆலோசனையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஈரானில் அமைதியற்ற சூழல் இண்டிகோ விமானசேவை இரத்து

ஈரானில் அமைதியற்ற சூழல் நீடிப்பதால் இண்டிகோ விமான நிறுவனம் தமது சேவையை பெப்ரவரி 28 வரை இரத்துச் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் உள்நாட்டு போராட்டம் வெடித்துள்ளதையடுத்து அங்கு அமைதியற்ற சூழல் நீடித்துள்ளமையால் ஈரான் தமது வான்வெளியை மூடியது.

இந்த நிலையில், ஈரானில் நிலவும் சூழலை கருத்திற் கொண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி வரை இண்டிகோ விமான நிறுவனம் தமது சேவையை இரத்துச் செய்வதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.




# சீனாவில் ரயில் பாலம் இடிந்து விபத்து; 05 பேர் உயிரிழப்பு

சீனாவில் கட்டுமானத்தில் இருந்த ரயில் பாலம் ஒன்று இடிந்து விழுந்ததில் 05 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜியாங்சுவில் உள்ள யான்செங்கில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.

மீட்புக் குழுக்களின் தொடர் முயற்சியின் பயனாக 03 பேரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற உடனேயே அவசர சேவைகள் அனுப்பப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் -04.02.2026




இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிளில் கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மனநிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீரகள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




சிக்கல்களில் சிக்காமல் இருக்க இன்று உங்கள் செயல்களில் பொறுமை தேவை.இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

உங்கள் சக பணியாளர்களுடன் சில பிரச்சினைகள் ஏற்படும். இதனால் உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தடைகள் இருக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்கையில் கவனம் தேவை. எரிச்சலூட்டும் நடத்தை அல்லது கடுமையான வார்த்தைகள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.

அதிக உடல் உழைப்பின் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடல் நலத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று அதிர்ஷ்டகரமான நாளாக இருக்காது. என்றாலும் உங்கள் கடின முயற்சி மூலம் உங்கள் திறமைகளை நிரூபிக்கலாம். தடைகளைக் கண்டு லட்சியத்திலிருந்து விலகாதீர்கள்.

பணியில் தவறுகள் நேரலாம். இதனால் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிறிது கவனமுடன் இருக்கவும்.

உங்கள் துணையுடன் கடுமையாகப் பேசுவீர்கள் அல்லது வன்மையுடன் நடந்து கொள்வீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியை கெடுக்கும்.எனவே இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதிக நீரைப் பருகவும்.




இன்று வாய்ப்புகள் நிறைந்து காணப்படும். என்றாலும் முடிவெடுக்கும் போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் எளிதாக பணியாற்றுவீர்கள். பணியிடத்தில் உங்கள் திறனுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். ஊக்கத்தொகையாக பண வரவு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஒன்றாக இணைந்து பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு திருப்திகரமாகவும் போதுமானதாகவும் இருக்கும்.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.




தகவல் பரிமாற்றங்களை கவனமாகக் கையாள வேண்டும். யதார்த்தமாக இருக்க வேண்டியது அவசியம். பொறுமையைக் கையாள வேண்டும்.

சில பணிகள் குறித்தநேரத்தில் முடியாது. உங்கள் நேரத்தை பயனுள்ளதாக ஆக்க திறமை தேவை.

நீங்கள் உணர்ச்சிவயப்பட்டு அந்த உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் அமைதியின்மை ஏற்படும்.

நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்காது. அதிக செலவினங்கள் காணப்படும்.

பல் வலிக்கான சாத்தியம் உள்ளது. உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக்கொள்ள வேண்டும்.




தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பணியில் அதிக கவனம் தேவை. பொறுப்புக்களின் காரணமாக இன்று பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நட்பான அணுகுமுறை சிறந்தது.

செலவுகள் அதிகமாக இருக்கும். நிதிநிலையில் சமநிலையைப் பராமரிப்பது இன்று கடினமாக உணர்வீர்கள்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும். சகபணியாளர்களும் தரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்று வரும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




தைரியத்துடனும் உறுதியுடனும் முன்னேறுவீர்கள். இன்று முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிக்க போதுமான வாய்ப்புகள் காணப்படும். உங்களுக்கு கொடுத்த வேலையை குறித்தநேரத்திற்குள் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருப்பதன் காரணமாக உங்களின் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -04.02.2026




இன்று அனுகூலமான நாள். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இருவருக்குமிடையே மகிழ்ச்சி காணப்படும்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் தடையாக இருக்காது.




இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். மனதில் குழப்பம் இருக்கும் என்பதால் முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அமைதியைப் பராமரிக்க வேண்டும்.

செலவுகள் அதிகரிக்கும் என்பதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

சளி, இருமல் அல்லது தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்.




உங்கள் முன்னேற்றத்துக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். உங்கள் லட்சியங்களை அடைய நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். வாழ்வில் வரும் மாற்றங்களை நடைமுறைப்படுத்த தைரியமாக இருங்கள்.

உங்களது தற்போதைய பணியில் திருப்தியின்மை காணப்படும். மேலும் உங்கள் வளர்ச்சிக்காக பணி மாற்றம் விரும்புவீர்கள்.

உறவில் புரிந்துணர்வை பராமரிக்க உங்கள் துணையை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று குறைந்த அளவு பண வரவே காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக அதிகமாக செலவு செய்ய நேரும்.

கண் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். உங்களை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்.




உங்கள் முயற்சிகளில் நீங்கள் விரும்பும் பலன் கிடைக்கும். இன்று எதிர்பாராத சில நன்மைகள் உங்களுக்கு மகிழ்ச்சியை தரும்.

இன்று நீங்கள் விரைவாகப் பணியாற்றுவீர்கள். அதையும் எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை கழிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

# தனங்கிளப்பு காணியில் நேற்று வெளிப்பட்ட வெடிப்பொருள்கள்





யாழ்ப்பாணம் – சாவகச்சேரி தனங்கிளப்பு பகுதியில் வசிக்கும் ஒருவரது காணிக்குள் சில வெடிப்பொருள்கள் நேற்றையதினம் மீட்கப்பட்டன.

துப்புரவுப் பணியில் ஈடுபட்ட சமயமே இந்த வெடிபொருகள் மீட்கப்பட்டன.

ஒரு மோட்டார் குண்டு, ரி56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் மற்றும் ஒரு கைக்குண்டு என்பன அடையாளம் காணப்பட்டன.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதியுடன் விசேட அதிரடிப் படையினர் மூலம் வெடிபொருள்களை அங்கிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.